**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**U/F Clrmp. in S.C.127/2021** P.W. 6

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு.மாதவன் | Caste: |
| Father's /Husband Name. தங்கவேல் | Calling: விவசாய கூலி வேலை |
| Village :. கரியாப்பட்டினம் | Religion: இந்து |
| Taluk : வேதாரண்யம் | Age . |
| Date : 14.12.2023 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 14.12.2023

(Accused present. )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் கரியாப்பட்டினத்தில் வசித்துவருகிறேன். விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். ஜோதிபாசு என் சகலை ஜோதிபாசுவை பார்ப்பதற்காக 01.07.2014 தேதி திருக்குவளைக்கு போனேன் பஸ்சை விட்டு இறங்கி சமத்துவபுரம் ஆர்ச் பக்கத்தில் நின்றபோது ஜோதிபாசுவும் அவரது மனைவி செல்வராணியும் பைக்கில் வந்தார்கள் அப்போது உத்திராபதி, செல்வமணி, அன்பழகன் ஆகிய மூவரும் பைக் ஓவர்டேக் பண்ணி மறைத்தார்கள் ஜோதிபாசுவும் அவரது மனைவியும் பைக்கைவிட்டு இறங்கியதும் செல்வமணியும் அன்பழகனும் ஜோதிபாசுவின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டார்கள் உத்திராபதி கத்தியால் ஜோதிபாசுவை குத்திவிட்டார் அதை தடுக்கபோன அவரது மனைவி செல்வராணியை உத்திராபதி சேலையை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்துவிட்டார் ஜோதிபாசுவை உத்திராபதி கத்தியல் குத்தியபோது அவர் வலிதாங்காமல் ஓங்கி உதைத்துவிட்டார். அதில் உத்திராபதி ரோட்டில் கீழே விழுந்து கல்குத்தி அவருக்கும் காயமாகிவிட்டது. அவரையும் மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். ஜோதிபாசுவை அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். நான் கேட்க போனபோது அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள் ஆனால் என்னையும் சேர்த்து பொய்யாக கேஸ் போட்டுவிட்டார்கள். ஜோதிபாசுவை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.